இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 23-08-2024

# பாவம் ஜெயலலிதா !

**முத்தமிழறிஞர் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவரது நூற்றாண்டை முன்னிட்டு 100 ரூபாய் நாணயத்தை ஒன்றிய அரசு வெளியிட்டது. வெளியிட ஆணையிட்டது ஒன்றிய அரசு என்பதால் ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்களை விழாவுக்கு அழைத்திருந்தார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் அன்றைய தினம் ஆற்றிய உரை என்பது கலைஞருக்கான புகழுரையாக இல்லாமல், கலைஞரது அரசியல் கொள்கைகளைப் போற்றும் உரையாக அமைந்திருந்தது. 'சம்பிரதாயத்துக்காக' அவர் உரையாற்றவில்லை. கலைஞர் அவர்கள் எந்தக் கருத்தியல்களுக்காக வாழ்நாள் முழுக்க பாடுபட்டாரோ அந்தக் கருத்தியலை - 'எதிர்முகாமில்' இருக்கக் கூடிய ஒருவர் ஒப்புக்கொண்டு ஆற்றிய உரையாக அமைந்தது மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்களது உரை.

**மாற்றாரையும் மனமாற்ற வைக்கும் ஆற்றல் படைத்தவர் கலைஞர் அவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக அந்த விழா அமைந்திருந்தது.**

இதைப் பார்த்து வயிற்றெரிச்சல் அடைந்த எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, "எதற்காக ராஜ்நாத் சிங்கை அழைத்தார்கள்? நாங்கள் பா.ஜ.க. அணியில் இருந்தபோதுகூட பா.ஜ.க. தலைவர்களை அழைத்து விழா நடத்தவில்லை. பா.ஜ.க.வுக்கும் தி.மு.க.வுக்கும் ரகசிய உறவு இருக்கிறது" என்று சொல்லி தனது குணத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

பழனிசாமியும்தான் பிரதமர் மோடியை அழைத்தார். அவர் தான் வர மறுத்தார். இதை மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார் பழனிசாமி.

24.5.2017 அன்று அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, ஒரு பேட்டி அளித்தார். "அம்மா படத்தை சட்டமன்றத்தில் திறக்கப் போகிறோம். அதை திறந்து வைக்க பாரதப் பிரதமருக்கு அழைப்பு விடுத்துள்ளேன். வருகிற டிசம்பர் மாதம் சென்னையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா பிரமாண்டமாக நடக்க இருக்கிறது. அந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றேன்" என்று பேட்டி அளித்தார். இன்றும் அது சமூக வலைதளங்களில் இருக்கிறது.

**அன்றைய தினமே பிரதமர் நரேந்திர மோடிக்கு பழனிசாமி ஒரு கடிதம் அனுப்பினார். சட்டமன்றத்தில் ஜெயலலிதாவின் படத்தை வைக்கப் போகிறோம், ஜூலை மாதத்தில் ஒருநாள் நீங்கள் வந்து திறந்து வைக்க வேண்டும் என்று கடிதம் எழுதினார் பழனிசாமி. அவரை மதிக்கவில்லை பிரதமர் மோடி. வரவில்லை பிரதமர் மோடி. 'ANY DAY' என்று சொல்லிக் கூட பார்த்தார் பழனிசாமி. ம்கூம் வரவில்லை.**

சட்டமன்றத்தில் ஜெயலலிதா படத்தை திறந்து வைக்கவும், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் கலந்து கொள்ளவும்தான் பிரதமர் மோடியை அழைத்தார் பழனிசாமி. 24.5.2017 ஆம் தேதியன்று தேதி கேட்டார்கள். அவர்கள் தரவில்லை. காத்திருந்து காத்திருந்து கண்கள் பூத்துவிட்டது. இறுதியாக எட்டு மாதம் கழித்துதான் பழனிசாமி விழா நடத்தினார். 13.2.2018 அன்று சட்டசபையில் ஜெயலலிதா படத்திறப்பு விழா நடந்தது. அன்றைய பேரவைத் தலைவர் தனபாலை வைத்து ஜெயலலிதா படத்தை திறந்து விட்டார் பழனிசாமி. இதில் சூடு பட்ட பழனிசாமி, எம்.ஜி.ஆர். நாணயம் வெளியீட்டு விழாவுக்கும் யாரையாவது வரவழைக்கப் பார்த்தார். ஆள் கிடைக்கவில்லை. அவரே நடத்தி விட்டார்.

**2019 ஜனவரி 17 ஆம் தேதி எம்.ஜி.ஆர்.நாணயத்தை பழனிசாமி வெளியிட பன்னீர் செல்வம் பெற்றுக் கொண்டார். அதைக்கூட பழனிசாமியால் இன்று வெளியில் சொல்ல முடியாது. இப்படிப்பட்டவருக்கு கலைஞர் நூற்றாண்டு விழாவைப் பார்த்தால் வயிறு எரியத்தான் செய்யும்?**

**"ஜெயலலிதாவுக்கு ஒரு இரங்கல் கூட்டம் கூட நடத்த வக்கு இல்லாத பழனிசாமிக்கு கலைஞர் நூற்றாண்டு விழாவைப் பற்றி பேச என்ன அருகதை இருக்கிறது?"** என்று கேட்டார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின். அதற்கு பழனிசாமியால் பதில் சொல்ல முடியவில்லை.

**தலைவர் கலைஞருக்கு எத்தனை நிகழ்வுகள் நடத்தப்பட்டன? அகில இந்திய தலைவர்கள் கலந்து கொண்ட புகழஞ்சலி, தமிழ்நாடு தலைவர்கள் பங்கேற்ற புகழஞ்சலி, திரையுலகத்தினர் பங்கேற்ற புகழஞ்சலி, இலக்கிய ஆளுமைகள் பங்கேற்ற புகழஞ்சலி, பத்திரிகையாளர்கள் பங்கேற்ற புகழஞ்சலி என்று தி.மு.க. தலைமைக் கழகம் நடத்தியது. அதன்பிறகு மருத்துவர்கள், நீதியரசர்கள், மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொறியாளர்கள், மகளிர், விளிம்பு நிலை மக்கள் - என ஒவ்வொருவரும் தனித்தனியாக நடத்தினார்கள்.**

**முக்கிய நகரங்களில் தலைவர் கலைஞரின் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. சென்னை கிண்டியில் மாபெரும் மருத்துவமனையும், மதுரையில் நூலகமும், கிளாம்பாக்கத்தில் பேருந்து நிலையமும் அமைக்கப்பட்டது. இப்படி எதையும் பழனிசாமியால் பட்டியல் போட முடியுமா?**

ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள மர்மத்தைக் கூட அவிழ்க்காதவர் பழனிசாமி. ஆறுமுகச் சாமி ஆணையத்தை முடக்கி வைத்திருந்தவர்தான் பழனிசாமி. ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவில் கொள்ளை நடந்தது. கொலை நடந்தது. தற்கொலை நடந்தது. அதை மூடி மறைக்க முயற்சித்தவர் பழனிசாமி. இதுதான் ஜெயலலிதாவுக்கு பழனிசாமி செய்த சிறப்பு ஆகும். சொல்ல வெட்கமாக இல்லையா பழனிசாமிக்கு?

ஜெயலலிதாவின் போயஸ்கார்டன் வீட்டை நினைவகம் ஆக்கிவிட்டதாக பொய் சொல்லி இருக்கிறார் பழனிசாமி. ஜெயலலிதா வீட்டை நினைவகம் ஆக்குவதற்கான உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் 2021 ஆம் ஆண்டே (நவம்பர் 24) ரத்து செய்துவிட்டது. ஜெயலலிதாவின் சட்டபூர்வ வாரிசுதாரர்களுக்கு சாவியை ஒப்படைக்க உத்தரவிட்டது நீதிமன்றம்.

**ஜெயலலிதாவை துளி கூட மதிக்கவில்லை பழனிசாமி என்பதற்கு இப்படி எத்தனையோ சொல்லலாம். 'அம்மா' வளர்த்தது எல்லாம் என்ன மாதிரியான ஆட்கள் என்று தெரிகிறதா?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.8.2024) முகாம் அலுவலகத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், கந்திக்குப்பத்தில் தனியார் பள்ளி பயிற்சி முகாமில், பள்ளி மாணவிகள் சிலர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக பாதுகாப்பு ஆணையர் ஜானி டாம் வர்கீஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### யாருக்கும் பயனாளிகள் பணம் கொடுக்க வேண்டாம்!

# 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டம் சிறப்பான திட்டம்!

## காட்பாடியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

வேலூர், ஆக.23-

கலைஞரின் கனவு இல்ல திட்ட பயனாளிகளிடம் பணம் வசூலிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள், யாருக்கும் பணம் கொடுக்க வேண்டாம் என காட்பாடியில் நடந்த நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணை மற்றும் இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் விழா காட்பாடி அடுத்த சேவூரில் நடந்தது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி தலைமை தாங்கினார். மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.



இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு 335 பேருக்கு கலைஞரின் கனவு இல்ல திட்டவீடு கட்டுவதற்கான அனுமதி ஆணை வழங்கியும், 207 பேருக்கு வீட்டு மனை பட்டா வழங்கியும் பேசினார்.

அவர் பேசியதாவது:-

நான் இந்த விழாவிற்கு வருவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தகவல் தெரிவித்தேன். அதற்கு அவர், கலைஞர் கனவு இல்லம் வீடு ஆணை ஒதுக்கீடு செய்வதற்கு சிலர் பணம் கேட்பதாக தகவல் வருகிறது, அவ்வாறு கேட்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இக்கூட்டத்தில் வலியுறுத்தி சொல்லுங்கள் என்றார்.

நான் மட்டும் யோக்கியனாக இருந்து மற்றவர்கள் எல்லாம் வேறு மாதிரியாக இருந்தால் பிரயோஜனம் இல்லை. முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் பொதுமக்களுக்காக வாரி, வாரி வழங்குகிறார். இதுபோன்ற ஆட்சியே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

பாரதிய ஜனதா கட்சி மத்திய மந்திரி வந்து பாராட்டி விட்டு சென்றுள்ளார். எதிர்க்கட்சியினரே பாராட்டும் அளவுக்கு தி.மு.க. ஆட்சி உள்ளது.

மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதவர்களுக்கும் விரைவில் கண்டிப்பாக கிடைக்கும்.

50 ஆண்டுகளாக நான் பொது வாழ்க்கையில் உள்ளேன். நான் சிரித்தால் சிரித்து, நான் அழுதால் அழுது என்னுடன் இருக்கும் கழகத் தோழர்கள் தான் என்னுடைய உயிர் மூச்சு. அவர்களிடம் நான் சில நேரம் கோபித்துக் கொள்வேன், சில நேரம் மகிழ்ச்சியாக இருப்பேன், இது எல்லாம் உங்களின் நன்மைக்காகத்தான்.

காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 41 கிராமங்களில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்ட ரூ.3.50 லட்சம் அரசு வழங்குகிறது. இதில் காட்பாடி பகுதியில் வீடு இல்லாதவர்கள் ஆயிரம் பேர் உள்ளனர். வேலூர் மாவட்டத்திற்கு 4000 வீடுகள் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

அதில் ஆயிரம் வீடுகள் காட்பாடி பகுதியில் கட்டப்படுகிறது. நீங்கள் சிக்கனமாக வீட்டை கட்ட வேண்டும். வீடு கட்டுவதற்காக ஆணை பெற்று தருவதாக கூறி ஒரு பத்தாயிரம் 25 ஆயிரம் என சிலர்கேட்பதாக தகவல் வந்துள்ளது.

நீங்கள் யாருக்கும் ஒரு பைசா கூட கொடுக்கக்கூடாது யாராவது கேட்டால் அதிகாரிகளுக்கோ அல்லது உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கோ தகவல் தெரிவிக்க வேண்டும் இல்லை என்றால் எனக்கு ஒரு போன் செய்தால் போதும். திங்கட்கிழமையில் கலெக்டரிடம் புகார் மனு அளிக்கலாம். அவ்வாறு தகவல் தெரிந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில் குமார், காட்பாடி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணைத்தலைவர் சரவணன், திட்ட இயக்குனர் செந்தில்குமரன் மண்டல குழு தலைவர் புஷ்பலதா, காட்பாடி ஒன்றிய கழக செயலாளர் தணிகாசலம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

*கடலூர், ஆக. 23-*

*வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர் என மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அதன் விவரம் வருமாறு:-*

*அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.*



*இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர், 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல் நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6, மற்றும் 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்கு சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குபதிவு அதிகாரி அலுவலகங்களில் சேர்க்கலாம்.*

*பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப் வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10 அல்லது 12ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ளவிண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும் இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி (voter helpline mobile app) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.*

*மேற்கண்ட இப்பணிகளில் கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அந்தந்த வாக்குச் சாவடி நிலைமுகவர்களுடன் (BLA2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.*



புதுடெல்லி கிருஷிபவானில், தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நேற்று முன்தினம் (21.8.2024) ஒன்றிய நுகர்வோர் நலம், உணவு மற்றும் பொது விநியோகத் திட்ட அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு மாநிலத்திற்கு வரவேண்டிய உணவு மானிய நிலுவைத்தொகை மற்றும் உணவுத்துறை குறித்த கோரிக்கைகளை வலியுறுத்தினார். இந்நிகழ்வின் போது மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, ஒன்றிய அரசின் உணவு பொது விநியோகத் திட்டச் செயலாளர் சஞ்சீவ் சோப்ரா, தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் அண்ணாதுரை, தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் மோகன் ஆகியோரும் உடனிருந்தனர்.